# கே.ஆர்.கல்வி நிறுவனங்கள், கே.ஆர்.நகர், கோவில்பட்டி
## லட்சுமி அம்மாள் நினைவு பதினொன்றாவது அகில இந்திய ஹாக்கி போட்டி - 2019

**கோவில்பட்டி மே 17, 2019**

17.05.2019 நடைபெற்ற பதினொன்றாவது லட்சுமி அம்மாள் நினைவு கோப்பை அகில இந்திய ஹாக்கி போட்டி குறித்த செய்திகள்

**4வது லீக் ஆட்டம்:** மும்பை யூனியன் வங்கி மற்றும் சென்னை தெற்கு ரயில்வே அணி.

கோவில்பட்டி, கே.ஆர்.மருத்துவம் மற்றும் கல்வி அறக்கட்டளையின் சார்பில், கே.ஆர்.கல்வி நிறுவனங்கள், லட்சுமி அம்மாள் ஸ்போர்ட்ஸ் அகாடமியுடன் இணைந்து நடத்தும் பதினொன்றாம் ஆண்டு லட்சுமி அம்மாள் நினைவு சுழற் கோப்பைக்கான அகில இந்திய ஹாக்கிப் போட்டிகள் மே 16ம் தேதி முதல் மே 26ம் தேதி வரை கோவில்பட்டி செயற்கை புல்வெளி மைதானத்தில் பகல் இரவு ஆட்டமாக மின்னொளியில் நடைபெற்று வருகிறது.

**போட்டியின் 2வது நாளான இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற 4வது லீக் ஆட்டத்தில் மும்பை யூனியன் வங்கி அணியுடன் சென்னை தெற்கு ரயில்வே அணி மோதியது.**

**இதில் 0 : 0 என்ற கோல் கணக்கில் மும்பை யூனியன் வங்கி அணியும் சென்னை தெற்கு ரயில்வே அணியும் சமநிலைப் பெற்றது.**

திரு. அமித் சயினி மற்றும் திரு. சுரேஷ்குமார் ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர்: கரண் தாகூர், (கோல்கீப்பர்) யூனியன் வங்கி, மும்பை.

(Refer Photo - LASA2019_170520198_LEAGUE_4_Photo)

**5வது லீக் ஆட்டத்தில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன்ஸ் அணியுடன் சென்னை சாய் அணி மாலை 6.30 மணியளவில் மோதியது.**

**இதில் 1:0 என்ற கோல் கணக்கில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன்ஸ் அணி வெற்றிப் பெற்றது.**

55-வது நிமிடத்தில் பெங்களூர் பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன்ஸ் அணி வீரர் அப்கரன் சுதேவ் ஒரு பீல்டு கோல் போட்டார்.

திரு. ஷாகில் அகமது மற்றும் திரு. மல்ஹைட் சிங் ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர்: **அப்கரன் சுதேவ்,** பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன்ஸ், பெங்களூர்

(Refer Photo - LASA2019_170520198_LEAGUE_5_Photo)

**மேலும் 6வது லீக் ஆட்டத்தில் சண்டிகர் சிஜஎஸ்எப் அணியுடன் பெங்களூர்** கனரா வங்கி அணி இரவு 8.30 மணியளவில் மோதியது.

**இதில் 4:1 என்ற கோல் கணக்கில் பெங்களூர்** கனரா வங்கி **அணி வெற்றிப் பெற்றது.**

15-வது நிமிடத்தில் பெங்களூர் கனரா வங்கி அணி வீரர் திக்ஷித் பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

28-வது நிமிடத்தில் பெங்களூர் கனரா வங்கி அணி வீரர் சோமனா ஒரு பீல்டு கோல் போட்டார்.

40-வது நிமிடத்தில் பெங்களூர் கனரா வங்கி அணி வீரர் பிரதான் சோமனா ஒரு பீல்டு கோல் போட்டார்.

51-வது நிமிடத்தில் பெங்களூர் கனரா வங்கி அணி வீரர் திக்ஷித் பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

59-வது நிமிடத்தில் சண்டிகர் சிஜஎஸ்எப் அணி வீரர் ஹர்பித் சிங் பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

திரு. அமீத் சையினி மற்றும் திரு. ராஜ்குமார் ஜா ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர்: **திக்ஷித்,** கனரா வங்கி, பெங்களூர்

(Refer Photo - LASA2019_170520198_LEAGUE_6_Photo)

**நாளை 18.05.2019 நடைபெறும் போட்டிகள்:**

| வ.எண். | நேரம் | அணி - 1 | அணி - 2 |
|---|---|---|---|
| 1 | 4.30 am | சவுத் சென்ட்ரல் ரயில்வே, செகந்தராபாத் | ஐசிஎப், சென்னை |
| 2 | 6.30 pm | தெற்கு இரயில்வே, சென்னை | லட்சுமி அம்மாள் ஸ்போர்ட்ஸ் அகாடெமி, கோவில்பட்டி |
| 3 | 8.30 pm | ஆல் இந்தியா கஸ்டம் & ஜிஎஸ்டி, மும்பை | இந்தியன் வங்கி, சென்னை |